## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### நான்காம் வருட/ முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு (2013/ 2014 Batch)

### 2016/2017 (June 2019)

## ECS 4143 Environmental Economics

நேரம் : 3 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் மூன்று வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

01.

(அ) இயற்கை வளங்களின் வகைகளைக் குறிப்பிட்டு அதன் இயல்புகளைப் பட்டியல்படுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் நகரப்பிரதேசங்களில் காணப்படுகின்ற முக்கியமான சுற்றாடல் பிரச்சினையான திண்மக் கழிவகற்றல் பிரச்சினையையும் அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகளையும் விளக்குக?

(10 புள்ளிகள்)

02.

(அ.) சந்தைச் சமநிலைக்கும் (Market Equilibrium) சமூகத் திறன்வாய்ந்த சமனிலைக்கும் (Socially optimum Equilibrium) இடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.

(7 புள்ளிகள்)

(ஆ.) "சந்தைப் பொறிமுறையானது வெளிவாரி விளைவுகளை கருத்திற்கொள்ளாமையால் சந்தைத் தோல்வி ஏற்படுகின்றது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

(7 புள்ளிகள்)

(இ.) வடகிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட 5 செயற்திட்டங்கள் தொடர்பான தனியார் நலன், தனியார் செலவு மற்றும் வெளிவாரி நலன், வெளிவாரிச் செலவு என்பன அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | செயற்திட்டம் A | செயற்திட்டம் B | செயற்திட்டம் C | செயற்திட்டம் D | செயற்திட்டம் E |
|---|---|---|---|---|---|
| தனியார் நலன் | 225 | 230 | 240 | 205 | 140 |
| தனியார் செலவு | 200 | 110 | 190 | 220 | 195 |
| வெளிவாரி நலன் | 100 | 55 | 70 | 55 | 80 |
| வெளிவாரிச் செலவு | 170 | 150 | 100 | 45 | 25 |

(I.) மேலே காட்டப்பட்ட 05 செயற்திட்டங்களினதும் தேறிய சமூக நலனைக் கணிப்பிடுக?

(2 புள்

(II.) தேறிய சமூக நலனின் அடிப்படையில் செயற்திட்டங்களை 1 முதல் 5 வரை தரமிடுக?

(2 புள்

(III.) இவற்றில் சிறந்த திட்டம் எதுவென பரிந்துரைப்பீர்? காரணம் தருக?

(2 புள்

03.

அ.) வெளிவாரி விளைவை உள்வாரி விளைவாக மாற்றுதல் என்றால் என்ன? (5 புள்

ஆ.) கீழுள்ள வரைபடம் உற்பத்திசார் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் காட்டுகிறது.




- பின்வரும் பகுதிகளை மேலே குறிப்பிட்ட ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு பெயரிடுக.

1. மொத்த வெளிவாரிச் செலவு
2. உற்பத்தியாளரும் நுகர்வோரும் வாத்தகத்தின் மூலம் பெற்ற மொத்த பெறுகைகள்
3. விற்பனையின் மீதான தேறிய மெய்ப் பெறுகைகள்
4. சந்தைச் சமனிலை மற்றும் சமூகத்திறன் வாய்ந்த சமனிலை
5. சமூக நலன் இழப்பு (Social Welfare Loss)
6. பிகுவின் வரியளவு (Pigouvian Tax) (6*1= 6 புள்

3.)

நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறுவனமொன்று X என்ற பொருளை உற்பத்தி செய்கிறது. இது நீண்டகாலத்தில் பொருளியல் இலாபத்தை அனுபவிக்கிறது. ஒரு அலகு X பொருளிற்கான சந்தை விலை 20/= ஆகும். நிறுவனத்தின் எல்லைச் செலவு கொடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் எல்லைச் செலவு MC = 0.4 Q ஆயின், நிறுவனம் எத்தனை X அலகுகளை உற்பத்தி செய்யும்?

(3 புள்ளிகள்)

அரசு, இந்த நிறுவனத்தினுடைய உற்பத்தி நடவடிக்கையால் சுற்றுச் சூழலிலுள்ள வளி மாசடைதலின் எல்லை சமூகச் செலவு MSC = 0.5 Q ஆகக் காணப்படுவதைக் கண்டறிந்தது.

1. இச் சந்தர்ப்பத்தில் X பொருளுக்கான சந்தை விலை 20/= காணப்படும் நிலையில் சமூக உத்தம வெளியீட்டு மட்டத்தைக் காண்க? (3 புள்ளிகள்)

2. சமூக உத்தம வெளியீட்டு மட்டத்திற்குக் கொண்டுவர அரசு எவ்வளவு தொகையினை வரியாக விதிக்க வேண்டும்? (3 புள்ளிகள்)

## பகுதி II

04. இன்று உலகளாவிய ரீதியில் மனிதனை அச்சுறுத்தும் சூழலியற் பிரச்சினைகள் அதற்கான காரணங்கள் அதன் விளைவுகள் மற்றும் அவற்றை முகாமை செய்வதற்கான நெறிமுறைகளை பேண்தகு அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

05.

(அ.) மல்தூசினுடைய சூழல் தாங்கும் இயலளவுக் கோட்பாடு பற்றி சுருக்கமாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

(ஆ.) வளமுகாமைத்துவத்திற்கும் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை ஆராய்க?

(10 புள்ளிகள்)

06.

(அ.) வெளிவாரி விளைவு என்பதை வரையறை செய்து அதில் நுகர்வு தொடர்பான வெளிவாரி விளைவுகளை வரைபடத்தின் உதவியோடு உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ.) வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்த அரசு கைக்கொள்ளும் சந்தை முறைசார்ந்த மற்றும் சந்தை முறை சாரா கட்டுப்பாட்டு முறைகளை ஆராய்க?

(10 புள்ளிகள்)

07. பின்வரும் சுற்றாடல் மதிப்பீட்டு நுட்பங்களில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவுசெய்து பண்புகளையும் அதனூடாக சுற்றாடலில் காணப்படும் பொருட்கள் பெறுமதியிடப்படும் முறை அதன் அனுகூலங்களையும் ஆராய்க?

a) ஹெடோனிக் பிற்செலவுப் பகுப்பாய்வு முறை (Hedonic Price Model)
b) கொன்ரின்ஜன் பெறுமதியிடல் நுட்பம் (Contingent Valuation Method)
c) பிரயாணச் செலவு மாதிரி (Travel Cost Method)

(20 பு

*********************